




தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத்துறை முதன்மை செயலரும், கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான திரு.டி.கே.இராமச்சந்திரன், இ.ஆ.ப.,அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சாவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், வடகிழக்கு பருவமழை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (27.11.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.டி.கெட்ஸிலீமா அமலினி ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்:840/2016 நாள்:27.11.2016

**தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத்துறை முதன்மை செயலரும், கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான திரு.டி.கே.இராமச்சந்திரன், இ.ஆ.ப.,அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சாவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், வடகிழக்கு பருவமழை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக்கூட்டம் இன்று (27.11.2016) நடைப்பெற்றது.**

தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத்துறை முதன்மை செயலரும், கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான திரு.டி.கே.இராமச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சாவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், வடகிழக்கு பருவமழை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (27.11.2016) நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் தமிழக அரசின் முதன்மை செயலரும், கண்காணிப்பு அலுவலருமான திரு.டி.கே.இராமச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சாவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், பருவமழை தொடங்குவது காலதாமதம் ஆனது தொடர்பாக விவசாய பயிர்கள் நடவு செய்யப்பட்டுள்ளது குறித்தும், அப்பயிர்களுக்கு தண்ணீர் வரத்து குறித்தும், பாரத பிரதமரின் பசல் பீமா யோஜனா பயிர் காப்பீடு திட்டத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை விபரங்கள் குறித்தும், காப்பீடு செய்யப்பட்ட காப்பீடு தொகைகள் குறித்தும், கூட்டுறவு கடன் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசாணை எண்.132-இல் தெரிவித்துள்ளப்படி விவசாயிகளுக்கு மத்திய கூட்டுறவு வங்கியில் தனித்தனியாக சேமிப்புக் கணக்கு தொடங்கி அதன் வழியாக ஒரு வாரத்திற்கு ரூ.25,000/- ரொக்கமாக வழங்கப்படுவது குறித்தும், அணைகளின் இருப்பு நிலவரம் குறித்தும், நகராட்சிகள்/ பேரூராட்சிகள் /ஊராட்சிகளில் பொதுமக்களுக்கு குடிநீர் தொடர்ந்து தட்டுப்பாடின்றி வழங்குவது குறித்தும், ஊரக வளர்ச்சித்துறை மூலம் செயல்படுத்தப்படும் பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.டி.கெட்ஸிலீமா அமலினி, இணை இயக்குநர் வோளாண்மைத்துறை திரு.இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு.பொ.இராஜேந்திரன் (பொது), திரு.நிஜாமுதின் (விவசாயம்), துணை இயக்குநர்(தோட்டக்கலைத்துறை) திரு.அசோக் மேக்ரின், உதவி இயக்குநர் (போரூராட்சிகள்) திரு.முத்துகுமார், நாகர்கோவில் ஆணையாளர்(பொ) திரு.சுரேஷ், பேரிடர் மேலாண்மை தனி வட்டாச்சியர் திரு.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக தமிழக அரசின் முதன்மை செயலாளரும், கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான திரு.டி.கே.இராமசந்திரன் இ.ஆ.ப.,அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சாவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் தோவாளை வட்டம், இராமபுரம் ஊராட்சி, கோழிகோட்டு பொத்தை என்ற இடத்தில் நெல் மற்றும் வாழை சாகுபடி செய்வதற்கு போதுமான தண்ணீர் இல்லாததால் கடலை பயிர் செய்துள்ளதை பார்வையிட்டார்.மேலும் ஆளூர் பேரூராட்சிக்கு உட்பட்ட சுங்கான்கடை என்ற இடத்தில் நாற்றுகள் நடாமல் விடப்பட்ட விவசாய நிலங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் விவசாயிகளிடம் அணைகள் மற்றும் கால்வாய்களிலிருந்து போதுமான தண்ணீர் விவசாயத்திற்கு வருகிறதா என்பதை கேட்டறிந்து, மாற்று பயிரான உளுந்து, கடலை, மரவள்ளி ஆகியவற்றை பயிர் செய்து பயடையுமாறு கேட்டுக்கொண்டார்.

ஆய்வின்போது கூடுதல் இயக்குநர்(வோளாண்மை) திரு.ஜோ பிரைட், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ, நாகர்கோவில் கோட்டாட்சியர்.திரு.ஆர், ராஜ்குமார், இணை இயக்குநர் வோளாண்மைத்துறை திரு.இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) திரு.நிஜாமுதின், பொதுப்பணித்துறை(நீர் ஆதரவு) செயற்பொறியாளர் சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் திரு. விஜயகுமார், உதவி பொறியாளர்கள் திரு.லாறன்ஸ், திரு.ரமேஷ்ராஜன், உதவி இயக்குநர்(வேளாண்மைத்துறை) திருமதி.ஹேனிஜாய் சுஜாதா, தோவாளை வட்டாட்சியர் திருமதி. முத்துலெட்சுமி, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. அருளரசு, வட்டாரவளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்ச்சிகளின் செயல் அலுவலர்கள், கூட்டுறவுத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.